# சத்திய வார்த்தை

ஜூன் 2024
மலர் 22, இதழ் 9

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# பரலோக ராஜ்யத்திற்குள் நுழையும் தகுதி



# பரலோக ராஜ்யத்திற்குள் நுழையும் தகுதி

“அனுமதி இலவசம்”, “நுழைவுக் கட்டணம் இல்லை'' என்று எழுதப்பட்ட அறிவிப்புப் பலகைகளைப் பார்த்தவுடன் நமக்கு எவ்வளவு ஆனந்தம், மகிழ்ச்சி வருகிறது. ஆனால், நடைமுறை அனுபவத்தில் எல்லா இடங்களிலும் இப்படி அனுமதி இலவசம் என்று கூறுவது சாத்தியமாக இருக்காது. அப்படி எல்லா இடங்களிலும் எல்லோருமே செல்ல அனுமதித்தால் பல குழப்பங்கள், பல விபரீதங்கள் நடக்கும் என்பதை அறிவோம். ஒருமுறை நான் எனது மாணவர்களை அழைத்துக் கொண்டு மறைந்த பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அம்மையாரைப் பார்ப்பதற்குச் சென்ற போது, எங்களது உடமைகள், சரீரத்தின் ஆடை, அணிகள் எல்லாம் நன்கு சோதிக்கப்பட்டுப் பின்புதான் அவர்களைப் பார்ப்பதற்கு அனுமதி கிடைத்தது. ஒரு நாட்டின் தலைவரைப் பார்ப்பதற்கு இவ்வளவு பரிசோதனைகள், சட்ட திட்டங்கள் தேவையானால் ஆண்டவரை சந்திப்பதற்கு, அவரது பரலோக ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு எத்தனை தகுதி - சோதனைகள் நடத்தப்படுவது அவசியம். இந்த உலகத்தில் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குச் செல்ல வேண்டுமானால் அந்த நாட்டிற்குள் நுழைவதற்கு அனுமதி சீட்டு (விசா) பெறுவது எவ்வளவு கடினம் என்பதை நாம் அறிவோம். இதற்குப் பல காரணங்கள் உண்டு. வெளிநாட்டிலிருந்து ஒரு நாட்டிற்கு புதிதாக வருபவர்கள் மூலமாக புதிய வியாதிகள் பரவலாம். அந்நிய நாட்டினர்கள் அதிகமாகும் போது அந்நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்து வரக்கூடும். பொருளாதாரம், அந்நாட்டின் கலாச்சாரம், பின்பு குடும்ப வாழ்க்கைகள், சுற்றுப்புற சூழ்நிலைகள் அனைத்துமே பாதிக்கப்படலாம். அதனால்தான் ஆண்டவரும் தனது ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு பணம் என்ற ரீதியில் பார்த்தால், நுழைவுக் கட்டணம் நிச்சயம் முற்றிலும் இலவசம்தான். ஆனால் குணம் என்ற அடிப்படையில் பல நிபந்தனைகள் உண்டு. இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் ஆண்டவரது பரலோக ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு தகுதிப்படுத்தும்படி நம்மை ஒப்புக் கொடுப்போம். ஆண்டவரது வசனத்தைப் புரட்டிப் படிப்போமானால் அவரது ராஜ்யத்திற்குள் நுழைவதற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள தகுதிகள் தேவை என்று வாசிக்கிறோம்.

1) மறுபடியும் பிறக்க வேண்டும் (யோ. 3 : 3)

2) சிறு பிள்ளைகளைப் போல மாறி தாழ்மையைத் தரிக்க வேண்டும். (மத். 18 : 3,4)

3) உபத்திரவத்தின் வழியாய்க் கடந்து செல்ல வேண்டும். (அப். 14 : 22)

4) தேவையோடு இருப்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். (மத். 25 : 35)

5) விடாமுயற்சி. (லூக். 9 : 62)

6, 7) அன்பு, விசுவாசம். (யாக். 2 : 5)

*__1. மறுபடியும் பிறக்க வேண்டும் :__*

*இயேசு நிக்கொதேமுவிற்கு பிரதியுத்தரமாக ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். (யோ. 3 : 3)*

அமெரிக்காவில் வாழ்ந்து கொண்டிருந்த இந்தியர்களாகிய ஒரு இளம் தம்பதியரை நான் அங்கு சென்றபோது ஒருமுறை சந்தித்து பேசிக் கொண்டிருந்தேன். அவர்களது ஒரு வயது பையன் அமெரிக்காவில் பிறந்த காரணத்தினால் அவன் அமெரிக்க குடிமகனாகும் உரிமை கிடைத்து விட்டதாம். ஆனால், அவர்களுக்கு அமெரிக்காவின் பிரஜைகளாக மாறும் உரிமை இன்னும் கிடைக்கவில்லை. ஆம்! ஒரு நாட்டின் குடிமகனாகும் உரிமை பெறவேண்டுமானால் அந்நாட்டின் மண்ணில் பிறக்க வேண்டும்.

அதுபோலவே பரலோக ராஜ்யத்தின் குடிமகனாகும் உரிமையைப் பெறவேண்டுமானால் அந்த பரலோக ராஜ்யத்தில் பிறக்க வேண்டும் – மண்ணில் பிறந்த நாம் விண்ணில் குடிமகனாக மாற மறுபடியும் நமது ஆவியில் மறுபிறப்பின் அனுபவத்தைப் பெறவேண்டும். மறுபடியும் பிறத்தல் என்றால் என்ன? யூதருக்குள் அதிகாரியாகவும், போதகனாகவும் இருந்த நிக்கொதேமுவிற்குப் புரியவே இல்லை. "மறுபடியும் பிறத்தல்" என்ற சொல்லிற்கு இயேசு கொடுக்கும் விளக்கத்தை ஆராய்வது நல்லது.

ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான்.

மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் (யோ. 3:5, 6).

இங்கு இயேசு கொடுத்துள்ள விளக்கத்தில் நாம் எளிதில் புரிந்து கொள்ளக்கூடியது மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும். இதற்கும்கூட சற்று விளக்கம் தேவை. மாமிசம் பிறப்பது கிடையாது. குழந்தைதான் பிறக்கிறது. மாம்சம் என்ற சொல் புதிதாய் பிறக்கும் ஒரு குழந்தையைக் குறிக்கிறது. எப்படி ஒரு குழந்தை பிறப்பதற்கு ஒரு விந்து அவசியமாக இருக்கிறதோ, அதுபோலவே பரலோக ராஜ்யத்தின் குழந்தை உருவாக வேண்டுமானால் ஆண்டவருடைய வார்த்தை – என்ற விந்து விதை ஒரு மனிதனின் உள்ளத்தில் விதைக்கப்பட்டு அந்த வார்த்தை அவனது உள்ளத்தையும், ஆவியையும் மாற்றி அவனை மனந்திரும்பச் செய்கிறது. இது நடக்கும்போது, அவனது வாழ்க்கையில் மாறுதல் ஏற்படுகிறது. புத்தம் புதிய வாழ்க்கை, மாற்றப்பட்ட ஜீவியம், புதிய சகாப்தம் தொடங்குகிறது. மறுபடியும் பிறப்பது என்ற சொல்லிற்கு புதிதாக பிறப்பது – புதிய பிறப்பு என்ற விளக்கம் சாலப் பொருந்தும்.

ஒரு மனிதனை மாற்றுவது ஒரு சாதாரண செயலல்ல. தென் ஆப்பிரிக்காவில் மிகப் பெரிய கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் ஆப்பிரிக்கானர். இவனுடைய சடலத்தையோ அல்லது உயிருடனோ கொண்டு வருபவருக்கு 10,00,000 ரூபாய் வெகுமதி கொடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்தது. ஆனால், அந்த மனிதனின் இனத்தவர் மத்தியில் மிஷனெரி ஊழியம் செய்வதற்காக ராபர்ட் மொஃபெட் சென்றார். நிச்சயம் அவரது மண்டை ஓட்டை அந்த ஆப்பிரிக்கானர் என்பவன் சாராயம் குடிக்க உபயோகப்படுத்துவான் – என்று எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், ராபர்ட் மொஃபெட் தைரியமாக அந்த இனத்தார் மத்தியில் சென்று ஆண்டவருடைய வசனத்தை பிரசங்கித்த போது, அந்த இனத்தின் தலைவன் தான் முதலில் இரட்சிக்கப்பட்டான். அவனை கவர்னர் முன்பாக கொண்டு வந்து நிறுத்தியபோது, "இவன் மாறியது, இந்த உலகத்திலேயே எட்டாவது அதிசயம்" என்று கூறினார்.

இதை வாசிக்கும் சகோதரனே, சகோதரியே! மறுபடியும் பிறந்த அனுபவம் உனக்கு உண்டா? ஆண்டவருடைய வசனத்தைப் பலமுறை நீ கேட்டிருக்கலாம். ஆனால் உன் பாவத்தை உணர்ந்து அதை அறிக்கையிட்டு, அதை விட்டு விட்டு புதிதான வாழ்க்கையை வாழ்கிறாயா? *ஒருவன் கிறிஸ்துவிற்குள் இருந்தால் புது சிருஷ்டியாக இருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின; எல்லாம் புதிதாயின (2 கொ. 5 : 17)* என்று வேதத்தில் வாசிக்கிறோம். ஆம்! நமது ஜீவியத்தில் மறுபடியும் பிறந்த அனுபவம் இருக்குமானால், நமது வாழ்க்கையில் நிச்சயம் மாறுதல்கள் இருக்க வேண்டும். பழையவைகள் – பழைய பாவங்கள், பழைய பாவ பழக்க, வழக்கங்கள், பழைய பாவ எண்ணங்கள், சிந்தனைகள், விரோதங்கள், பழைய குடிப் பழக்கங்கள், பாவச் செயல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு, ஒழிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியானால் மறுபடியும் பிறந்தவர்கள் பாவமே செய்ய மாட்டார்களா? என்றதொரு கேள்வி எழுகிறது. புதிதாக மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்ற ஒரு சிறு பெண்ணிடம்

இந்தக் கேள்வி கேட்கப்பட்ட போது, அச்சகோதரி பின்வருமாறு பதில் கொடுத்தாள்; நான் மறுபடியும் பிறப்பதற்கு முன்பு பாவத்தை நோக்கி ஓடிக் கொண்டிருந்தேன். (I was running towards sin) ஆனால் மறுபடியும் பிறந்த பின்பு, பாவத்தை விட்டு ஓடிக் கொண்டிருக்கிறேன். (I am running away from sin) இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நான் ஒரு பாவத்தைச் செய்தால், அதைப்பற்றி எனக்கு ஒரு கவலையும் கிடையாது. என்னை நானே பிரியப்படுத்திக் கொண்டிருந்தேன், ஆனால், இரட்சிக்கப்பட்ட பின்பு நான் இயேசுவைப் பிரியப்படுத்த விரும்புகிறேன். ஏதாவது பாவம் செய்துவிட்டால், ஐயோ, இயேசுவின் மனதைப் புண்படுத்திவிட்டேனே என்ற உணர்வு எனக்கு ஏற்படுகிறது. இதுதான் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்த வாழ்க்கைக்கும், இரட்சிக்கப்பட்ட பின்பு வாழும் வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் – என்று அந்த சிறுபெண் விளக்கம் கொடுத்தாள்.

நினிவே பட்டணத்தாருக்கு யோனா பிரசங்கித்தபோது, அவர்கள் இரட்டுடுத்தி தங்களது பாவங்களுக்காக மனம்திரும்பி, அழுதபோது அந்தப் பட்டணத்தின் மீது வரவிருந்த அழிவை ஆண்டவர் மாற்றினார் (யோனா. 3 : 6–9). இயேசுவை மறுதலித்த போது பேதுரு மனங்கசந்து அழுதான் (மத். 26 : 75), கெட்டகுமாரன் தனது குற்றங்களை உணர்ந்து தனது தகப்பனிடத்திற்குச் செல்ல புறப்பட்டான் (லூக். 15 : 21). ஆயக்காரன் ஆண்டவரே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் – என்று தன் மார்பில் அடித்துக் கொண்டு கெஞ்சினான் (லூக். 18 : 13).

*தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான், அதை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி. 28 : 13).*

*நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார் (சங். 34 : 18).*

## *2. சிறுபிள்ளைகளைப் போல மாறி, தாழ்மையைத் தரிக்க வேண்டும் :*

அவ்வேளையிலே சீஷர்கள் இயேசுவினிடத்தில் வந்து, பரலோக ராஜ்யத்தில் எவன் பெரியவனாயிருப்பான் என்று கேட்டார்கள், இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி :

நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான் (மத். 18 : 1–4).

நம்மில் யார் பெரியவன் என்ற போட்டி இன்று நேற்றல்ல, ஆதி அப்போஸ்தலர் காலத்திலிருந்தே இருந்து வந்திருக்கிறது. சீஷர்கள் பரலோக ராஜ்யத்தைக் குறித்துப் பேசியது போற்றத் தகுந்தது. ஆனால், அதில் யார் பெரியவர் என்ற தர்க்கம் தகாதது மாத்திரமல்ல, அபாயகரமானதும் கூட. வெட்டிப் பேச்சு, வீண் பேச்சுகள் மூலமாகத்தான் இந்தத் தலைப்பில் பேச்சுப் போட்டி சீஷர்கள் மத்தியில் ஆரம்பித்திருக்க வேண்டும். இதை அறிந்த இயேசு, பரலோக ராஜ்யத்தில் யார் பெரியவனாயிருப்பான் என்ற சீஷர்களின் கேள்விக்கு, நீங்கள், சிறுபிள்ளைகளைப் போல் மாறாவிட்டால் அதில் பிரவேசிக்க முடியாது – என்று பதில் கூறுகிறார். உள்ளே பிரவேசிக்கவே முடியாத போது பெரியவனாக மாறுவது எப்படி? என்று தலையில் அடித்தார் போல் ஒரு கேள்விக் கணையைத் தொடுக்கிறார்.

### *அ) மற்றவர்களை மன்னிக்கும் சுபாவம் :*

ஆம்! நாம் மனந்திரும்பிய பின்பு, பிள்ளைகளைப் போல் கள்ளமில்லாதவர்களாய், கபடமற்றவர்களாய், மனத்தாழ்மையைத் தரித்தவர்களாய் மாற வேண்டும். சிறு

பிள்ளைகளைப் போல் மாறுவது என்றால் அதனுடைய அர்த்தம் என்ன? சிறுபிள்ளைகளின் தன்மைகள், குணங்கள் நம்மிடத்தில் காணப்பட வேண்டும். சிறுபிள்ளைகளிடத்தில் நாம் காணும் ஒரு நல்ல பண்பு – மற்றவர்கள் செய்த தவறை மன்னித்து மறந்துவிடுதல். அவர்கள் விளையாடும் போது அடிக்கடி சண்டை வரும். ஆனால் விரைவில் அதை மறந்துவிட்டு, நன்றாகக் கூடி திரும்பவும் விளையாட ஆரம்பிப்பார்கள். ஒரு தடவை ஞாயிறு ஆராதனைக்கு புறப்படுவதற்கு முன்னதாக இரு கிறிஸ்தவக் குடும்பத்தின் பிள்ளைகள் சண்டை போட ஆரம்பித்தார்கள். சிறுபிள்ளைகள் சண்டை, பெரியவர்கள் சண்டையாக மாறியது. அதன் விளைவு இரு குடும்பத்தாரும் ஆலயத்திற்கு அன்று செல்லவில்லை. சிறிது நேரம் கழித்துப் பார்த்தால் சண்டை போட்ட இரு குடும்பத்தின் பிள்ளைகள் நன்றாகச் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆம்! சிறுபிள்ளைகளிடத்தில் நாம் கற்றுக் கொள்ளவேண்டிய ஒரு நல்ல பயனுள்ள பாடம் மற்றவர்களது தவறை மன்னித்து, மறக்கும் சுபாவம். ஒருநாள் எனது வீட்டிலுள்ள நாயை ஒரு குச்சியை வைத்து, கோபத்தில் அடித்து விட்டேன். அக்குச்சி அதன் கண்ணில் பட்டுவிட்டதால் அப்படியே சுருண்டு படுத்துக் கொண்டு வலியால் துடித்தது. கொஞ்ச நேரம் கழித்து அதனிடம் சென்ற போது எந்தக் கையினால் நான் அடித்தேனோ, அந்தக் கையை அந்த நாய் நக்கிற்று. இதைக் கண்டபோது என் உள்ளம் நொறுங்கியது. நான் அடித்ததை அந்த நாய் இவ்வளவு சுலபமாக, விரைவாக மறந்துவிட்டு, தனது எஜமானின் கையை நக்கி, தனது அன்பை வெளிப்படுத்துகிறது. எனது நாய்க்கு இருக்கும் மன்னிக்கும் சுபாவத்தை எனக்குத் தாரும் என்று ஜெபித்தேன்.

வட அமெரிக்காவில் மெத்தெடிஸ்ட் மிஷனெரிகள் ஊழியம் செய்ததின் பயனாக அங்குள்ள மலைவாழ் ஜாதியின் தலைவன் மஸ்கபெட்டுன் என்பவன் ஆண்டவரை ஏற்றுக் கொண்டான். "பிதாவே இவர்கள் குற்றங்களை மன்னியும்" என்ற ஆண்டவரின் ஜெபம் இவனைத் தொட்டது. திடீர் தாக்குதல், வளைந்து முறியடித்தல், நடுநிசி படையெடுப்பு – இவற்றில் இவன் கை தேர்ந்தவன். இவனது ஒரே மகனை இவனது நண்பன், நம்பிக்கைக்குப் பாத்திரவானாக எண்ணப்பட்டவன், வஞ்சகமாக ஏமாற்றி கொடூரமாக கொன்று விட்டான். தன் மகனைக் கொன்றவன் இவன் முன்னால் கொண்டு வரப்பட்டான். தன் பட்டயத்தை உருவியவாறு கோபக்கனல் பொங்க, உணர்ச்சி வெள்ளத்தில் இவ்வாறு கூறினான். "நம்பிக்கை துரோகம் செய்து என் ஒரே செல்ல மகனைக் கொன்று விட்டாய். இது எனக்கும் என் இனத்தவருக்கும் நீ செய்த மகாப் பெரிய துரோகம். என் வாளுக்கு இந்நேரம் நீ இரையாகியிருப்பாய். ஆனால் அந்த மிஷனெரிகள் மற்றவர்கள் செய்த தவறை மன்னிக்க வேண்டும் என்று எனக்கு சொல்லிக் கொடுத்துள்ளார்கள். எனவே நானும் உன்னை மன்னித்து விடுகிறேன்" – என்று கூறிவிட்டு, தனது பட்டயத்தை உறையில் போட்டுவிட்டு தன் குதிரையின் கழுத்தைக் கட்டிப் பிடித்து ஓவென்று அழுது தன் உணர்ச்சிகளை யெல்லாம் வெளியே கொட்டினான்.

இவனது கதை இதோடு முடியவில்லை. தன் இனத்தவர் அனைவருக்கும் தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தைத் தவிர வேறு ஆயுதங்கள் அனைத்தையும் களையும்படி தன் இனத்தவருக்கு உத்தரவிட்டான். இவனது பரம எதிரி தனக்கு முன்னாலே ஆயுதத்தோடு வந்த போதும், ஆவியின் பட்டயமாகிய தேவ வசனமாகிய ஒரே ஆயுதத்தோடு எதிர்கொண்டு தன் எதிரியை சந்தித்தான். அதன் விளைவு? எதிரியின் குண்டுக்கு பலியாகி மரணத்தைச் சந்தித்தான். என்னவொரு சாட்சி! மற்றவர்கள் செய்த குற்றத்தை மன்னிப்பதற்கு தனது செல்ல மகனைக் கொன்றவனை மன்னித்தான். பின்பு அதே பாவ மன்னிப்பை தனது எதிரிக்கு அருளுவதற்காக தனது சொந்த ஜீவனையே பணயமாகக் கொடுத்தான். இந்த மஸ்கபெட்டுனின் உள்ளத்தில்

இருந்த மன்னிக்கும் சுபாவம் நம் ஒவ்வொருவருக்கும் இருக்குமானால் நமது இந்தியாவை இயேசுவின் பக்கமாக திசை திருப்புவது அவ்வளவு கடினமல்ல.

### *ஆ) தாழ்மை :*

நாம் பரலோக ராஜ்யத்தில் நுழைவதற்கு மாத்திரமல்ல அங்கே பெரியவனாயிருப்பதற்கு தேவையான இன்னொரு தகுதியை இப்படியாக இயேசு எடுத்துரைக்கிறார். *இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ அவனே பரலோக ராஜ்யத்தில் பெரியவனாயிருப்பான் (மத். 18 : 4).*

பரலோக ராஜ்யத்தில் நுழைந்தபின்பு, என்னுடைய திறமையினாலும், பரிசுத்தத்தினாலும், தாலந்தினாலும் தான் நான் பரலோகத்தில் நுழைந்தேன். எனக்கு இங்கு இடமில்லை யென்றால், வேறு யாருக்கும் இங்கு இடமிருக்க முடியாது என்று இவர் பரலோகத்தில் நுழைந்த பின்பு பாராட்டக்கூடும். *...பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கிறார் (1 பேது 5 : 5).* என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன் – என்று இயேசு கூறுகிறார். இன்றைக்கு பல குடும்பங்களில், சபைகளில் பிரச்சனைகள் உருவாகியதற்கு முக்கிய காரணம் பெருமை.

பிரசங்கிகளின் இளவரசர் என்று அழைக்கப்படும் ஸ்பர்ஜன் அவர்களிடம் பயிற்சி பெற்ற ஒரு இளம் பிரசங்கி, ஒரு பிரசங்கம் செய்வதற்காக பிரசங்க மேடையை நோக்கி நடந்து சென்றான். தான் மிக நேர்த்தியான, அழகான ஒரு பிரசங்கத்தை செய்யப் போகிறேன் – என்ற பெருமை அந்த வாலிபன் முகத்தில் தெரிந்தது. ஆனால் பிரசங்கம் அவ்வளவு சுவையாக இல்லை. பிரசங்கம் முடித்து விட்டு மேடையை விட்டு கீழே இறங்கும்போது தொங்கிய முகத்தோடு, வெட்கத்தோடு இறங்கினான். உடைந்த உள்ளத்தோடும், வேதனையோடும் ஸபர்ஜன் அவர்களிடம் போய், தனது தோல்விக்குக் காரணம் என்ன என்று வினவினான். அதற்கு ஸ்பர்ஜன் கொடுத்த பதில் : நீ எந்த முகத்தோடு மேடையை விட்டு கீழே இறங்கினாயோ அந்த முகத்தோடு நீ மேடையில் ஏறியிருப்பாயானால், எந்த முகத்தோடு மேடையில் ஏறினாயோ அந்த முகத்தோடு மேடையை விட்டு இறங்கியிருப்பாய். இதுதான் உன் தோல்வியின் இரகசியம் – என்று ஸ்பர்ஜன் பதில் சொன்னார்.

### *3) அநேக உபத்திரவங்களின் வழியாய்ப் பிரவேசிக்க வேண்டும் :*

*சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்தி சொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று சொன்னார்கள் (அப். 14 : 22).*

பரலோக ராஜ்யத்திற்குள் நுழைவதற்குத் தேவையான பல தகுதிகளில் மிகவும் கடினமான தகுதி இந்த உபத்திரவங்களின் வழியாக கடந்து செல்ல வேண்டிய தகுதி தான். யார் தான் உபத்திரவத்தை விரும்புவார்கள்? ஆனால் உபத்திரவங்கள் மூலமாகவே நமது இரட்சிப்பின் அதிபதியாகிய இயேசு கிறிஸ்துவும் பூரணப்படுத்தப் பட்டார் (எபி. 2 : 10) என்பதை நாம் மறக்கக் கூடாது.

உபத்திரவத்தின் வழியாக ஏன் நம்மை தேவன் நடத்துகிறார்? *நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது. அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன் (சங். 119 : 71 )* என்று சங்கீதக்காரன் கூறுகிறான், வெயிலில் அலைந்தால்தான் நிழலின் அருமை தெரியும் என்ற உண்மையை நமது வாழ்க்கையில் அடிக்கடி உணர்ந்திருக்கிறோம்.

ஜோசப் டர்னர் என்ற ஓவியர் கடலில் உருவான ஒரு புயல் – என்ற தலைப்பில் ஒரு அழகான ஓவியத்தை வரைந்திருந்தார். அதைப் பார்த்த

எல்லோரும், “இவ்வளவு அழகாக, தத்ரூபமாக, நேரில் பார்ப்பது போல தோன்றும் இந்த ஓவியத்தை எப்படி வரைந்தீர்கள்?” - என்று கேட்டார்கள். அதற்கு அவர் கொடுத்த பதில் இப்படிப்பட்ட காட்சியை ஓவியமாக வரையத் தீர்மானம் எடுத்த பின்பு, ஒருநாள் கடலில் புயல் ஏற்பட்டது. நான் ஒரு படகில் ஏறிக்கொண்டு, அந்த படகோட்டியிடம், எந்த இடத்தில் புயல் கடுமையாக வீசுகிறதோ, அந்த இடத்திற்கு என்னைக் கொண்டு போகும் படி சொன்னேன். புயல் வீசும் அந்த இடத்திற்கு வந்தவுடன், அந்தப் படகில் நட்டமாக ஒரு கம்பை நாட்டி, அந்தக் கம்பில் என்னைக் கயிற்றினால் கட்டினான். அப்படி நான் கட்டப்பட்டால்தான் புயலை நான் நன்கு பார்க்க முடியும். நான் அந்தப் புயலை என் கண்களால் பார்த்தது மாத்திரமல்ல, என்னையே அந்தப் புயலில் சிக்க வைத்துக் கொண்டு அப்புயலின் ஒரு அங்கமாக மாறினேன். புயல் நின்ற பின்பு என் வீடு திரும்பி, இந்த அழகான தத்ரூபமான கடலின் புயல் காட்சியை வரைந்தேன் - என்று கூறினார்.

ஆம்! உபத்திரவத்தின் வழியாகக் கடந்து சென்றால்தான் ஆண்டவருக்காக ஒரு அழகான, திறமையான கருவியாக நாம் மாற முடியும். மலைகளிலும், அதன் சரிவுகளிலும், பள்ளத்தாக்குகளிலும் வளரும் மரங்கள் வெள்ளத்தினாலும், காற்றினாலும், புயலினாலும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்த மரங்கள்தான் வலிமையும், பொலிவும் நிறைந்ததாகக் காணப்படும். இந்த உலகத்திலேயே மிக நறுமணம் உள்ள வாசனைத் திரவியங்கள் செய்யும் ரோஜா மலர்கள் சரியாக இரவு 12 மணிக்குத்தான் - அருமையான நறுமணத்தை கொடுக்குமாம். எனவே வேலைக்காரர்கள் சரியாக இரவு 12 மணிக்கு வந்து அந்த ரோஜா மலர்களை கொய்து கொண்டு போவார்கள். ஆம்! அந்த ரோஜா மலர்கள் கூட நடு இரவில் தான் தனது மேலான நறுமணத்தை வெளியே கொண்டு வருகிறது. நமக்கு கிறிஸ்தவ வாழ்க்கையின் மூலமாகவும், கிறிஸ்துவிற்காக நற்கந்தமாக வாசனை வீச வேண்டுமானால் நமக்கும் உபத்திரவம் என்ற நடுநிசி தேவையாக இருக்கிறது.

ஒரு வண்ணத்துப் பூச்சியை எடுத்துக் கொள்ளுங்கள். தனது கூட்டை விட்டு வெளியே வரும்போது அது தாங்க முடியாத வேதனையை அனுபவிக்கும். அப்படி அது கஷ்டப்பட்டு, வேதனையோடு வெளியே வந்தால் தான், அது கூட்டை விட்டு வெளியே வந்தவுடன் தனது அழகான சிறகுகளை விரித்து பறக்க முடியும். அதற்கு மாறாக, இது இவ்வளவு கஷ்டப்படுவது சரியல்ல என்று நினைத்து அது எளிதில் கூட்டைவிட்டு வெளியே வர நீங்கள் அதற்கு உதவி செய்தால் என்ன நடக்கும் தெரியுமா? அதன் சிறகுகளில் திரவியங்கள் இருப்பதால் தனது சிறகை விரித்து அது பறக்க முடியாமல் கீழே விழுந்து செத்து விடும். அதுபோலவே கழுகும் தனது கூட்டைக் கட்டும்போது அடியில் முள், பின்பு கூர்மையான கற்கள், கூர்மையான பொருட்கள் அதின் மேல் சிறகுகள் மற்றும் மிருகங்களின் தோல் இவைகளைக் கொண்டு கூட்டைக் கட்டும். குஞ்சுகள் பெரிதானவுடன் அவைகள் பறக்கும் பருவம் வந்தவுடன், வெளியே போகாவிட்டால் கழுகு தனது கூட்டைக் கலைத்து விடும். அப்பொழுது கூர்மையான கற்களும், முள்ளும் அந்தக் குஞ்சுகளின் சரீரத்தில் வேதனையைக் கொடுக்கும். தாய்க் கழுகு கல்நெஞ்சம் கொண்டதா? இல்லை! அந்தக் குஞ்சுகள் கூட்டை விட்டு வெளியே வந்து வானில் சிறகடித்துப் பறப்பதற்கு பழக்கப்படுத்த வேண்டும். அதுதான் தாய்ப் பறவையின் நோக்கம். அதுபோலவே, நம்முடைய வாழ்க்கையில் அவ்வப்பொழுது ஆண்டவர் நமக்கு துன்பம் என்ற முள், உபத்திரவம் என்ற கூர்மையான கல் - இவற்றை அனுப்புகிறார்.

இதை வாசிக்கும் அருமையான தேவனுடைய பிள்ளையே! ஒருவேளை நீ இதை வாசிக்கும் இவ்வேளையில் உபத்திரவத்தின் பாதையில் போய்க்கொண்டிருக்கலாம். அழுகையின் பள்ளத் தாக்கை நீ கடந்து கொண்டிருக்கக் கூடும். என் வாழ்க்கையில் ஏன் இத்தனை துன்பங்கள், வேதனைகள் என்று நீ கேட்கலாம். ஆண்டவரிடத்தில் இவைகள் ஏன், ஏன் என்று

கேட்பதற்குப் பதிலாக, ஆண்டவரே இவற்றிலிருந்து நான் என்ன கற்றுக்கொள்ள விரும்புகிறீர் – என்று கேட்பது நல்லது.

என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே. அவரால் கடிந்து கொள்ளப்படும்–போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் சிட்சிக்கிறார்.

எந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும், அதிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும் (எபி. 12 : 5, 6, 11).

*அன்றியும் அவருடைய தீர்மானத்தின் படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோ. 8 : 28).*

**- (Late) Rev. Prof. S.** *பன்னீர் செல்வம்*

*(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

# ஆசிரியர் மடல்

கர்த்தருக்குள் அன்பான சகோதர, சகோதரிகளுக்கு,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*''நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராயிருக்கிறார்'' (எபே. 3 : 20).*

ஒரு ஊரில் ஜான் என்ற இளைஞன் தன் தாயாருடன் வசித்து வந்தான். அவன் அப்பா தொலைதூரமுள்ள ஊரில் வியாபாரம் செய்து வந்தார். வீட்டிற்கு ஒருசில ஆண்டுகளுக்கு ஒருமுறையே வந்து செல்வார். ஆனால், குடும்பத்திற்கு தேவையான பணம், பொருட்கள், ஆடைகள் போன்றவற்றை வேறு வியாபாரிகள் மூலமாகக் கொடுத்து அனுப்புவார். ஜான் விரும்பும் பொருட்களையும் வாங்கி வருவார்கள்.

ஜானின் நண்பர்கள் பலர் வைத்திருந்த போனி (Pony) என்ற ஒரு வகையான மட்டக்குதிரை தனக்கு வேண்டும் என்று தன் அப்பாவிடம் சொல்லியிருந்தான். சீக்கிரமாகவே அப்பா தனக்கு வாங்கி அனுப்புவார் என்று நம்பியிருந்தான். பல நாட்களாகியும் வரவில்லை. ஒருநாள் அப்பா அனுப்பிய ஆள் வந்தார். “அப்பா குதிரை வாங்கி அனுப்பிட்டாங்க'' என்று சந்தோஷத்துடன் சென்றவுடன் குதிரை இல்லாததைக் கண்டான். வந்தவர், “தம்பி, நீ என்னோடு கிளம்பி வா! ஒரு மாதம் என்னோடு இருக்கனும் என்று அழைத்துச் சென்றார். குதிரை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு சென்றான். ஆனால், அவர் அவனை ஒரு மைதானத்திற்கு அழைத்துச் சென்று, ஓட்டம், வாள் சண்டை போன்ற பயிற்சிகளைக் கற்றுக் கொடுத்தார். ஆனால், குதிரை பற்றி எதுவும் பேசாமல் போய்விட்டார். அவனுக்கு அழுகையாக வந்தது. சில மாதங்கள் கழித்து வாசலில் குதிரை கனைக்கும் சத்தம் கேட்டவுடன் “அப்பா குதிரை அனுப்பிட்டாங்க” என்று நினைத்து ஓடினான். அவரோ குதிரையில் அமர்ந்தபடியே என் பின்னால் வா என்று கூறியபடி குதிரையில் சென்றார். இவனும் கூடவே வேகமாக ஓடினான். ஒரு காட்டிற்குள் சென்று நிறுத்தியபடி தம்பி ஒரு மாதம் நீ என்னோடு இருக்கணும் என்றார். ஜானும் இவராவது குதிரையைக் கொடுப்பார் என்று நம்பி தலையசைத்தான். ஆனால், அவரோ அவனுக்கு

ஒரு மாதமாகவும் எலும்பு முறிவுக்கும், தசைப் பிடிப்பிற்கும், மருத்துவம் பார்ப்பதையும், காயத்துக்கும், விஷக்கடிக்கும் பயன்படுத்தும் பச்சிலைகளையும் காண்பித்து கற்றுக் கொடுத்தார். அவனோ குதிரையை தொடக்கூட முடியவில்லை. அவரும் "தம்பி நீ போகலாம்" என்று கூறவே, ஏமாற்றத்தோடு அப்பாவைக் குறை கூறிக்கொண்டே வீடு திரும்பினான்.

சில மாதங்கள் கழித்து ஒரு விலையுயர்ந்த அரேபிய வெள்ளைக் குதிரையுடன் அப்பா வந்து நின்றார். ஏன் இதை முதலிலேயே கொடுக்காம, என்னை பல கஷ்டங்களுக்கு ஆளாக்கி வெறுப்பேத்தினீங்க? என்று கேட்டான்.

அவன் அப்பா அன்போடு அவனை முத்தமிட்டு, நீ கேட்டது மட்டக் குதிரை. ஆனால், நான் உனக்கு கொடுக்க விரும்பியது உயர்ரக குதிரை. ஆனால், இதை நிர்வகிக்க உனக்குப் பயிற்சி வேண்டும். குதிரை ஓடிப்போனாலும், ஓடிப் பிடிக்கவும், யாராவது குதிரையைக் கவர்ந்து கொள்ள உனக்கு ஆபத்து ஏற்படுத்தினால் தற்காத்துக் கொள்ள முதல் நபரைக் கொண்டும், உனக்கோ அல்லது குதிரைக்கோ அடிபட்டு விட்டால் நீயே கவனித்துக் கொள்ள இரண்டாவது நபரை அனுப்பி பயிற்றுவித்தேன். இப்போது நீ முற்றிலும் தகுதியுள்ளவன் என்றார்.

ஜான் கண்ணீரோடு தன் அப்பாவிடம், உங்கள் அன்பும், ஞானமும் ஈடில்லாதது. என் சிந்தனைக்கு அது எட்டாதது என்றான்.

*''தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோமர் 8 : 28).*

கடந்த 7.4.2024 அன்று மேட்டூர் டேம் ஷீலோவாம் சபையில் நடந்த காலை ஆராதனையில் சகோ. ராபர்ட் அவர்கள் தேவ செய்தியும், சகோதரி நவமணி அவர்கள் IBT ஊழிய விளக்கமும் கொடுத்தார்கள்.

IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பமும், காணிக்கையும் கொடுத்த சபை பாஸ்டர், சபை மூப்பர்கள் மற்றும் சபை மக்கள் அனைவருக்கும் IBT நன்றியைத் தெரிவிக்கிறது.

இதே மாதம் 12, 13 தேதிகளில் IBT-இன் வருடாந்தர உபவாச ஜெபக்கூட்டம் கோவை IBT சென்டரில் நடந்தது. தமிழ்நாடு, கேரளாவில் பணிபுரியும் IBT ஊழியர்களும், கோவையிலுள்ள பிரதிநிதிகள் சிலரும் கலந்து கொண்டார்கள். 13-ஆம் தேதி லோகோஸ் முகாமிற்காக மட்டும் ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன. இந்த இரு நாட்களிலும் சகோ. எஸ்.என். சங்கர், சகோ. ரெஜி ஜெல்லிப்பாரா மற்றும் IBT-இன் முன்னாள் தலைவர் திரு. எஸ். தீமோத்தி ஆகியோர் தேவ செய்தியளித்தார்கள்.

இதே நாளில் IBT-இன் லோகோஸ் முகாமின் 2-வது திட்டக் கூடுகையும் IBT-இன் President திரு. P. ஜெபஸ் செல்வின் அவர்களுடன் IBT-இன் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு லோகோஸ் முகாமிற்கான அனைத்துப் பணிகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு, தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.


மே மாதம் ஆனைகட்டி, பெத்தானியா முகாம் (மருத்துவமனை) வளாகத்தில் நடைபெற்ற IBT-இன் லோகோஸ் முகாம் மிகவும் ஆசீர்வாதமாக இருந்ததற்காக தேவனைத் துதிப்போம். இதில் வெளியிடப்பட்ட படுகா மொழியிலுள்ள ''புனித வேதாகமம்'' மற்றும் அனைத்துப் புத்தகங்களும் அந்தந்த மொழி பேசும் மக்களுக்கு தாமதமின்றியும், தடையின்றியும் விநியோகிக்கப்பட ஜெபியுங்கள்.

கர்த்தர் உங்கள் அனைவரையும் நன்மையால் முடிசூட்டி ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

"ஷாலோம்"

கர்த்தரின் பணியில்
*உங்கள் சகோதரன்*
*K. ஜெய்சிங்*

# IBT நிறுவனத் தலைவர் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களின் 11-ஆம் ஆண்டு நினைவு நாள் - 02.06.2024




*"அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுது கொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என்று எழுதியிருக்கிறதே"* *(ரோமர். 10 : 14, 15)*

# மிஷனெரி குழந்தைகளுக்குக் கல்வி நிதி

IBT இயக்கமானது ஒவ்வொரு ஆண்டும் நமது மிஷனெரிகளின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறதை நீங்கள் அறிவீர்கள். 2024-25 ஆம் கல்வி ஆண்டிற்கு பிள்ளைகளின் படிப்பிற்காக உதவித் தொகை ரூ. 3 இலட்சம் தேவைப்படுகிறது. IBT பங்காளர்கள், சத்திய வார்த்தை வாசகர்கள் மற்றும் ஊழிய பாரம் கொண்ட அனைவரும் மனமுவந்து உற்சாகத்துடன் நிதி உதவி வழங்கி பிள்ளைகளின் படிப்பிற்கான செலவுகளைத் தாங்க முன் வாருங்கள்.

– பொருளாளர்

# கிருஷ்ண பிள்ளை என்ற ஹென்றி ஆல்பிரட்
## (கி.பி. 1827 - 1900)
## சென்ற இதழ் தொடர்ச்சி...

*''கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' (அப். 16 : 31)* என்ற இறைவாக்குப்படி கிருஷ்ணபிள்ளையின் குடும்பத்தார் கிறிஸ்துவைத் துதித்தனர். வித்வான் கிருஷ்ணபிள்ளை 1864-ஆம் ஆண்டு மீண்டும் சாயர்புரத்திலுள்ள திருமறைக் கல்லூரியில் ஊதிய உயர்வுடன் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகப் பணியாற்றினார். பணியோடு ஆத்தும ஆதாயப் பணியும் செய்து வந்தார். தனித்தனியே நண்பர்களைச் சந்தித்து அவர்களுக்குக் கிறிஸ்துவின் அன்பைப் பற்றிக்கூறிக் கிறிஸ்தவ மார்க்கத்தில் அநேகரைச் சேர்த்ததால் உவாக்கர் குருவானவர் இவரை "மனிதரைப் பிடிக்கிறவர்" என்று அழைக்கலானார்.

ஒருநாள் ஏழை இந்து வாலிபன் ஒருவன் கலாசாலையில் சேர்வதற்காகக் கிருஷ்ண பிள்ளையிடம் வந்தான். இருவரும் இரவில் பேசிக் கொண்டே இருந்ததால் அவனை வித்வான் தன்னோட தங்கும்படி கேட்டுக்கொண்டார். அவன் சிவபக்தன் ஆனதால் கிறிஸ்தவர்கள் வீட்டில் உணவு அருந்த மறுத்துவிட்டான். அவனுக்குச் சமைக்கவும் தெரியாததால், அவனுக்கு அரிசி, காய்கறி, பாத்திரம் எல்லாம் வாங்கிக் கொடுத்து, சமைக்கவும் கற்றுக் கொடுத்தார். அவன் உணவை ஆயத்தம் செய்து சாப்பிடும் வரை கூடவே இருந்து அன்பு பாராட்டியதால் அவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டான். அந்த வாலிபன் தான், கோயம்புத்தூரில் பேராயராக இருந்த மகா கனம் ஏ.ஜே. அப்பாசாமி அவர்களின் தந்தை ஏ.ஜே. அப்பாசாமி பிள்ளையாவார். இக்காலக்கட்டத்தில் பாளையங்கோட்டையில் சி.எம்.எஸ். கல்லூரியில் (தற்போது St. John's College) ஆரம்பிக்கப்பட்டதால் அதற்கு தமிழ்ப் பண்டிதராக அழைக்கப்பட்டார். ஆகவே அவர் 1876-ல் கல்லூரியில் தமிழ் பேராசிரியராகப் பொறுப்பேற்றார்.

கிருஷ்ணபிள்ளை என்ற ஹென்றி ஆல்பிரட்டின் தலைசிறந்த (Master Piece) காப்பியமான இரட்சணிய யாத்திரிகத்தை இந்த நாட்களில் தான் எழுத ஆரம்பித்தார். இவர் தினமும் காலை எழுந்ததும் கவிபாடி இறைவனோடு தனித்திருந்து பின் தாமிரபரணி ஆற்றில் நீராடி வருவார். இவர் எப்பொழுதும் மிகச் சுத்தமாக இருப்பார். வாய்மையே பேசுவார். நேர்மை தவறாது நடந்து கொள்வார். இது இவரது தனித்தன்மை-யாகும். வித்வானுக்கு திருவனந்தபுரம் மகாராசர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவி கிடைத்ததால் 1887-ஆம் ஆண்டு குடும்பத்துடன் திருவனந்தபுரத்தில் குடியேறினார். இங்கே அவருக்கு ஓய்வு நேரம் அதிகம் இருந்ததால் இரட்சணிய யாத்திரிகத்தைத் தொடர்ந்து எழுதி வந்தார். தம் ஆருயிர் நண்பரான தனக்கோடி ராஜுவுக்கு குலசேகரப் பட்டணத்தில் உப்பளம் இருந்தது. அதைக் கவனிக்கத் தம் நண்பனின் வற்புறுத்தலினால் 1890-ஆம் ஆண்டு குலசேகரப் பட்டணத்தில் குடியேறினார். இங்கு வந்து ஒரு ஆண்டிற்குள் தனது மனைவியை இழக்க நேரிட்டது. இத்துயரத்தினூடேயே விடா முயற்சியாய் 1891-ஆம் ஆண்டில் இரட்சணிய யாத்திரிகத்தை எழுதி முடித்தார். இந்நூலை 1892-ஆம் ஆண்டு கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தினர் வெளியிட்டனர். இதற்கு நல்ல பாராட்டுகள் கிடைத்ததால் இவர் மேலும் நூல்களை தொடர்ந்து எழுத ஆரம்பித்தார். பின் இவர் பாளையங்கோட்டையிலிருந்து கொண்டே கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் தமிழ்ப் பிரிவிற்கு ஆசிரியராகத் தொண்டாற்றினார். இவர்

எழுதிய இரட்சணிய சமய நிர்ணயம் என்ற உரைநடை நூலை 1898-இல் கிறிஸ்தவ இலக்கிய சங்கம் வெளியிட்டது.

இவரது இலக்கியப் பணி உச்சக் கட்டத்தில் இருக்கும்பொழுது தான் இவரது குடும்பத்தில் ஒருவர்பின் ஒருவராக ஐந்து பேர் மரணம் அடைந்தனர். இந்த துயர நாட்களில் இவர் எழுதிய பக்திப் பாடல்களின் தொகுப்பே இரட்சணிய மனோகரம் ஆகும். இந்நாட்களில் தான் டோனாவூர் உவாக்கர் குருவான வரும், ஏமிகார்மைக்கேல் அம்மையாரும் வித்வானிடம் தமிழ் கற்று வந்தனர்.

1899-ஆம் ஆண்டு இறுதியில் கிருஷ்பிள்ளை தம் அயரா உழைப்பின் காரணமாக நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையானார். இவரைப் பார்க்கும்படி 17 வயதே நிரம்பிய ஏமிகார்மைக்கேல் அம்மையார் ஓர் அட்டைத் துண்டில் இயேசு என்று பெரிய எழுத்துக்களில் எழுதிக் கொண்டு 1900-ஆம் ஆண்டு பிப்ரவரி 3-ஆம் தேதி பாளையங்கோட்டைக்கு வந்தார். அவர் மரணத்தருவாயில் மயக்கமுற்ற நிலையில் இருந்தார். அம்மையார் அந்த அட்டையை அவர் முன்பாக வைத்தார்கள். கிருஷ்ணபிள்ளை தம் விரல்களால் அந்த எழுத்துக்கள் மேல் திரும்பத் திரும்ப எழுதிக் கொண்டே இருந்து அம்மாவைப் பார்த்துப் புன்முறுவலுடன் தம் கண்களை நிரந்தரமாக மூடிவிட்டார். இவரது சரீரம் திருத்துவ பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு சமாதானபுரம் கல்லறைத் தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

*தகவல் : மண்ணில் புதைந்த மாமனிதர்கள்*

# பணித்தளச் செய்திகள்

<u>*மொழிபெயர்ப்பாளர் :*</u>
<u>*சகோ. கேசப் மிர்கான்*</u>
<u>*மொழி : மிர்கான்*</u>
<u>*பணித்தளம் : பொதர்காம் (ஒடிஷா)*</u>

கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக!

கடந்த மாதத்தின் மொழிபெயர்ப்புப் பணிகளில் பழைய ஏற்பாடு பாகத்தில் 1 சாமுவேல் அதிகாரம் 1 முதல் அதிகாரம் 20 வரையில் சரிபார்ப்பு செய்யப்பட்டது. மிஷனெரிப் பணிக்காக சுரகாண்டி, கோண்டாபுரி, கொடதாபட்டா, நொடகுடா, தெம்ரா, சீர்மாபாண்டி, சந்தோஷ்பூர் ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, அவர்களுக்காக ஜெபித்து வந்தேன்.

சீர்மாபாண்டி என்ற பணித்தளத்தில் நான்கு புதிய விசுவாசிகள் ஞானஸ்நானம் எடுத்துக் கொண்டார்கள். இந்த ஆராதனையில் நானும் பங்கு பெற்றேன். கோயா மொழிபெயர்ப்பாளர் சகோ. அசரியா மாதுரியுடன் பெங்களூர் சென்று அவரால் முடிக்கப்பட்ட 4 நற்செய்தி நூல்களின் (Dummy Copies) நகல்களில் சகோதரன் கையெழுத்திட்டார்.

நான் கூறியபடி அவருக்குரிய பணிகளை சகோ. எஸ்றா காலேப் உதவியுடன் செய்து முடித்தார். பொதர்காம் பணித்தளத்தில் ஞாயிறு ஆராதனை, 2-ஆம் சனிக்கிழமை உபவாச ஜெபக்கூடுகையும் ஈஸ்டர் ஆராதனையும் நடத்தப்பட்டன. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

<u>*முன்னேற்றப் பணியாளர் :*</u>
<u>*சகோ. J. ராமலிங்கம்*</u>
<u>*பணித்தளம் : கோத்தகிரி (தமிழ்நாடு)*</u>

தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

கடந்த மாதத்திலும் என் முன்னேற்றப் பணி தடையில்லாமல் நடக்கும்படி கர்த்தர் அருள் புரிந்ததற்காக ஸ்தோத்திரம்.

நற்செய்திப் பணிக்காக ஓரசோலை, அன்னொடை, சீகொலா, காக்கல்துரை, கீழ்கோத்தகிரி, கோக்கால், குஞ்சப்பனை, மந்தரை ஆகிய கிராமங்களில் படகர், கோத்தர், இருளர் இனமக்கள் மத்தியில் நற்செய்திப் பணி செய்தோம். முன்னேற்றப் பணிக்காக சோலூர் மட்டம், அரவேணு, அளக்கரை, கேசலாடா, டானஸ்ட்டன், கேட்பெட்டாபுதூர், பர்னசைடு, கோத்தகிரி டவுன் ஆகிய இடங்களிலும், உதகை பகுதியில் உதகை டவுன், கருப்புமணியொழி, பிங்கர் போஸ்ட், காந்தல், ரோகினி, பர்ன்ஹில், சாலமோர், சாந்துரு, தூனேரி, அகலார், அட்டடி, ஓட்டுப்பட்டரை, பாலக்கொல ஆகிய பகுதிகளிலும், குன்னூர் பகுதியில் குன்னூர் டவுன், அருவங்காடு, பாய்ஸ் கம்பெனி, லிங்கம்மா காலனி, மவுண்ட் பிளசண்ட் ஆகிய பகுதிகளிலும் முன்னேற்றப் பணி நடந்தது. கடந்த மார்ச் மாதம் மூன்றாம் வாரம் ஞாயிற்றுக்கிழமை 17-ஆம் தேதி IBT ஊழியத்தின் முன்னேற்றக் கூட்டம் உதகை OBC சபையில் நடக்க தேவன் கிருபை புரிந்தார்.

கட்டெபெட்டு, வெஸ்ட் புரூக் பகுதிகளில் லோகோஸ் முகாம் நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. சகோ. ஆலன், சகோதரி. சந்திரா, மதன் பாஸ்டர், கௌசல்யா, விஜயராகவன், பிரியா இவர்களின் சுகவீனம் மற்றும் வீட்டுப் பிரச்சனைகள் மாறவும், என் முன்னேற்றப் பணிக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோ. சந்திரிகாதாஸ்*
*பணித்தளம் : பிந்திரா (உத்திரப்பிரதேசம்)*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதத்தில் மிஷனெரிப் பணிக்காக பெல்வா, ஜலால்ப்பூர், அசோக் நகர், நைபஸ்தி, கைக்கோலி, கங்காவா, தத்தாரா மற்றும் சுரேன் பஜார் ஆகிய கிராமங்களுக்குச் சென்று, நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகள் மற்றும் நற்செய்திப் புத்தகங்களையும் விநியோகித்து, தேவைப்பட்டவர்களுக்காக ஜெபித்து வந்தேன். பச்சோரா, தர்பேஸ்பூர் ஆகிய இடங்களில் திறந்த வெளியில் நற்செய்தியை அறிவித்தேன். நைபஸ்தி என்ற இடத்தில் ஒரு சகோதரன் பாபு பிரஜாபதி என்பவர் நடக்க முடியாமல் இருந்தார். பாரத்தோடு ஜெபித்த வேளையில் கர்த்தர் அவருக்கு அற்புத சுகம் கொடுத்து நடக்கச் செய்தார். இதேபோல் பிரபாவதி என்ற சகோதரியும் அவர்கள் வீட்டிற்கு என்னை அழைத்து, அவர்களுக்கு தொடர்ந்து வரும் கால் வேதனை மாறவும், நன்கு நடக்கவும் கர்த்தரிடத்தில் ஜெபிக்க கேட்டுக் கொண்டார். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என்ற வசனத்தின்படியாக, அவர்களுக்காக பாரத்தோடு ஜெபித்ததின் பலனாக கர்த்தர் அந்த சகோதரிக்கு நல்ல சுகம் கொடுத்தார். கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

----------•----------

*மொழிபெயர்ப்பாளர் : சகோ. தம்பிதுரை*
*மொழி : பனியா*
*பணித்தளம் : கூடலூர் (தமிழ்நாடு)*

உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் ஏற்கனவே வெளியிட்ட புதிய ஏற்பாடு புத்தகத்தை வாசித்து, அதில் தெரியும் தவறுகளை சரிபார்க்கும் பணியைச் செய்து வருகிறேன். அடுத்த பிரிண்டிங் செய்யும் போது, தவறுகள் சரி செய்யப்பட்ட நிலையில் இருப்பதற்காக செய்யப்படுகிறது. கடந்த மாதத்தில் 2 கொரிந்தியர் அதிகாரம் 5 : 1-ஆம் வசனம் முதல் அதி. 13 : 14 வரையிலும், கலாத்தியர் அதி 1 : 1 முதல் அதிகாரம் 4 : 31-ஆம் வசனம் வரையிலும் சரிபார்ப்பு செய்யப்பட்டன.

மிஷனெரிப் பணிக்காக ஹெல்த் கேம்ப், வண்டிப் பேட்டை பார்ட்டி ஹால், ராஜகோபாலபுரம், சாலிவயல், புத்தூர்வயல், மோரப்பாலம், தாஜ் ஹாஸ்பிடல் ரோடு ஆகிய இடங்களில் வீட்டு ஜெபம் மற்றும் Prayer Cell நடத்தினோம்.

முன்னேற்றப் பணிக்காக அப்பர் கூடலூர், ஜேபி கார்டன் ரோடு, வ.உ.சி. நகர், தேவாலா, பிள்ளையார் கோயில் வீதி, பந்தலம், ஆதிக்கண் வயல், சீயோன் ஹில் நகர், புத்தூர்வயல் ஆகிய இடங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து காணிக்கைப் பெற்று, அவர்களுக்காக ஜெபித்து வந்தோம்.

----------•----------

<u>*மொழிபெயர்ப்பாளர் :*</u>
<u>*சகோ. பீதாம்பர் மகனந்*</u>
<u>*மொழி : கலகாண்டியா*</u>
<u>*பணித்தளம் : லடுகன் (ஒடிஷா)*</u>

கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

இயேசு கிறிஸ்துவின் கிருபையால் கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் பழைய ஏற்பாடு பகுதியில் ஆதியாகமம் அதிகாரம் 38 : 1-ஆம் வசனம் முதல் யாத்திராகமம் அதி. 1 : 1 முதல் அதி. 40 : 38 வரையிலும், லேவியராகமம் அதி. 1 : 1 முதல் அதி. 4 : 35-ஆம் வசனம் வரையிலும் பாராடெக்ஸ்ட் Software-க்கு மாற்றப்பட்டுள்ளது.

இது தவிர, மிஷனெரிப் பணிக்காக பிரமால், ரான்மால் மற்றும் சச்சிகுடா ஆகிய கிராமங்களுக்குச் சென்று, கலகாண்டியா மொழி பேசும் மக்களைச் சந்தித்து அவர்களுக்கு நற்செய்தியைக் கூறி, IBT மூலமாக வெளியிடப்பட்ட இலக்கியப் புத்தகங்களைக் காண்பித்து, அதைக் குறித்து விளக்கிக் கூறினேன். சகோ. துலா, தனஞ்ஜெயா, மன்மத், சமாரா, கைபாலா, ரோஹிதா, கங்காதர், துஷ்மந்தா, லோம்பு, பூர்ஷா, ரத்னகாரா ஆகியோர் மிக வாஞ்சையுடன் கர்த்தருடைய வார்த்தைகளைக் கேட்டார்கள். உபவாச ஜெபக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் IBT இணை நிறுவனர், தலைவர், செயலர், பொருளர், தாங்குனர்கள், பிரதிநிதிகள், IBT ஊழியர்கள், சுகவீனமுற்றோர் ஆகியோருக்காகவும், IBT லோகோஸ் முகாமிற்காகவும் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. ஈஸ்டர் தினத்தன்று KRM சபையில் தேவ செய்தியளிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் என் பணித்தளத்தில் ஞாயிறு ஆராதனை நடத்தப்பட்டு வருகிறது. என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

<u>*மொழிபெயர்ப்பாளர் : சகோ. பிரகாஷ்சித்தி*</u>
<u>*மொழி : சித்திக்*</u>
<u>*பணித்தளம் : சித்தாப்பூர் (கர்நாடகா)*</u>

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மொழிபெயர்ப்புப் பணியில் புதிய ஏற்பாடு பாகத்தில் 1 கொரிந்தியர் அதிகாரம் 16 : 1 முதல் 24 வசனம் வரையிலும், 2 கொரிந்தியர் அதி. 1 : 1 முதல் அதி. 13 : 14-ஆம் வசனம் வரையிலும், கலாத்தியர் அதி. 1 : 1 முதல் அதி. 6 : 18-ஆம் வசனம் வரையிலும், எபேசியர் அதி. 1 : 1 முதல் அதி. 6 : 24-ஆம் வசனம் வரையிலும், கணினியில் கீ-இன் செய்தேன். மிஷனெரிப் பணிக்காக சித்தி மொழி பேசும் மக்கள் வசித்து வரும் கமுதிக்கோப்பா என்ற கிராமத்திற்குச் சென்று, சங்கீதம் 115, 103, 118, 119 ஆகியவற்றில் சில வசனங்களில் அடிப்படையில் தேவ செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். இங்கு (சித்தி மக்கள்) 45 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறார்கள். சில சுகவீனமுற்ற மக்களுக்காக ஜெபிக்கக் கேட்டதினால் அவர்களின் பூரண சுகத்திற்காக ஜெபித்தேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சுகமளித்தார். என் மொழிபெயர்ப்புப் பணிக்காகவும், இந்த சித்தி மக்களின் நல்வாழ்விற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளில் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

A/c. No. : 30008395600
Name : Indian Bible Translators
Branch Code : 7231
Branch : Peelamedu
IFS Code : SBIN0007231

**2. INDIAN BANK**

A/c. No. : 475742259
Name : Indian Bible Translators
Branch Code : S107
Branch : Peelamedu
IFS Code : IDIB000S107

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

# உலகச் செய்திகள்

★ 17 வயதான சென்னையைச் சேர்ந்த இந்திய கிராண்ட் மாஸ்டரான டி. குகேஷ், கனடாவின் டொராண்டோ நகரில் சமீபத்தில் முடிவடைந்த கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்திருக்கிறார். கேண்டிடேட்ஸ் செஸ் தொடரில் பட்டம் வென்றுள்ளதன் மூலம் உலக சாம்பியன் ஷிப் பட்டத்தை வெல்வதற்கான ஆட்டத்தில் குகேஷ், சீனாவின் டிங்லிரனுடன் இந்த ஆண்டு இறுதியில் மோத உள்ளார்.

★ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் 3 பெண் ஊழியர்களான சுபாஷினி, நித்யா, இந்திரா பிரியதர்ஷினி – குரூப் 1 தேர்வில் தேர்ச்சி.

★ பிரம்மோஸ் ஏவுகணை 4–ம் தொகுப்பு பிலிப்பைன்ஸுக்கு வழங்கியது இந்தியா.

★ வெப்ப அலை, பெருவெள்ளம், உருகும் பனிப்பாறைகள், இயற்கை பேரிடரால் 2023–ஆம் ஆண்டில் மோசமாக பாதிக்கப்பட்ட நாடு இந்தியா.

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. கர்த்தரின் பெரிதான கிருபையால், திட்டமிட்டபடியாக படுகா மொழியில் பரிசுத்த வேதாகமம், புதிய ஏற்பாடுகள், சிறுவர் வேதாமகப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு கிடைக்கவும், கடந்த மாதத்தில் நடைபெற்ற IBT லோகோஸ் 2024 முகாமில் வெளியிட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். வெளியிடப்பட்ட புத்தகங்கள் அந்தந்த மொழிபேசும் மக்களுக்கு மொழி பெயர்ப்பாளர்கள் மற்றும் மிஷனெரிகள் மூலமாக விநியோகிக்கப்படவும், வாங்கும் மக்கள் வாஞ்சையோடு அனுதினமும் படித்து, கர்த்தருக்குள்ளாக வளர ஜெபியுங்கள்!

2. மே மாதம் IBT லோகோஸ் முகாம் நடத்தத் தேவைப்பட்ட பொருளாதாரத் தேவைகளை சந்திப்பதற்கு மனமுவந்து ஜெபத்துடன் காணிக்கை கொடுத்து உதவும்படியான தாங்குநர்களை கர்த்தர் IBT ஊழியத்திற்கு தந்துள்ளதற்காக கர்த்தரைத் துதியுங்கள். காணிக்கை கொடுத்து உதவிய ஒவ்வொரு குடும்பங்களையும் கர்த்தர் எல்லா நன்மைகளினாலும் முடிசூட்டி, அவர்கள் வாழ்வை மேன்மைப்படுத்தவும், தொடர்ந்து தேவ நாம மகிமைக்காக வாழவும் ஜெபியுங்கள்.

3. வெளியிடப்பட்ட வேதாகமம், புதிய ஏற்பாடு, சங்கீதம் நீதிமொழிகள், அச்சிடுவதற்கு உள்ளார்வத்தோடு ஸ்பான்சர் செய்த கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட குடும்பங்களுக்காக தேவனைத் துதியுங்கள். இக்குடும்பங்களின் வருமானத்தை கர்த்தர் பெருகச் செய்யவும், எல்லாத் தீமைக்கும் விலக்கிக் காத்து, உயர்வைக் காணச் செய்ய ஜெபியுங்கள்.

4. IBT ஊழியம் தடையின்றி நடைபெற கர்த்தர் கொடுத்த பிரதிநிதிகளுக்காக கர்த்தரைத் துதியுங்கள். லோகோஸ் முகாம் நடத்த அதிக அளவில் பணத்தேவை இருந்த நிலையில், ஒவ்வொரு பிரதிநிதிகளும் உற்சாகத்தோடு பல தாங்குநர்களையும், புதிய தாங்குநர்களையும் அணுகி, தேவைகள் சந்திக்க உழைத்தார்கள். இதற்காக உழைத்த பிரதிநிதிகள் அனைவரையும், முன்னேற்றப் பணியாளர்களையும் இவர்கள் ஒவ்வொரு குடும்பங்களையும் கர்த்தர் அபரிமிதமாக ஆசீர்வதித்து வழிநடத்த ஜெபியுங்கள்.

5. இந்த முகாம் சிறப்பாக நடக்க ஜெபித்த அனைவருக்காகவும், மொழிபெயர்ப்பு சரிபார்ப்புப் பணியில் பெரும் உதவிபுரிந்த BSI Associate Director Rev. சுப்ரமணி, IMS மிஷனெரி கிரிஜா ஐசக் அவர்களுக்காக கர்த்தரைத் துதியுங்கள். இவர்கள் குடும்பங்களை கர்த்தர் ஆசீர்வதித்து வழிநடத்த ஜெபியுங்கள்.


Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**

**INDIAN BIBLE TRANSLATORS**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
Web : www.ibt1.com


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.
வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**

Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of
**Mr. K. JAISINGH**
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.

Printed by
**Mr. C.K. VENKATESH**
Chandra Prabha Press
113-118, V.H. Road, CBE-1.


## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவை புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வங்கியில் அனுப்பினால் IBT அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS

**CENTRAL BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 1630413107 |
| Name | : | Word Publishers Trust |
| Branch | : | Kalapatti |
| IFS Code | : | CBIN0282057 |

Address :

**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**

Date of Publishing : 2nd & 3rd June 2024
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**

**RNI No. 82166**